**S.C.No.58/2014**

**நாள். 13.12.2021**

**அ.சா.3 திரு. சீனுவாசன்**

**மனுவின் முன்னிலைக்கு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**என்னுடைய முதற்சாட்சியத்தில் முருகன் என்பவர் மதன்குமார் இறந்து கிடந்த குட்டை அருகில் ஆஜர் எதிரி வேகமாக போனதாக என்னிடம் சொன்னார் என்று சொல்லியுள்ள சங்கதி பொய்யானது என்றால் சரியல்ல. எதிரி போதையில் இருந்தார் என்பதை நீதிமன்ற சாட்சியத்தில் தான் அளித்துள்ளேன் என்றாலும், போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஊராருக்கே தெரியும். அ.சா.1 கொடுத்த புகாருக்காக தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் இறந்தவர் தம்பி பையன் என்பதால் எனக்கும் மகன் தானே. எதிரி நகையை திருடவும் இல்லை, அவ்வாறு செய்யவேண்டிய அவசியமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரி போதையில் இருந்ததால் அனைத்தும் நடந்தது. நகையை போலிசார் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது என்றால் ஊர் பொது மக்கள் முன்னிலையில் தான் கைப்பற்றப்பட்டது. சேட்டு நிலம் சமவெளி நிலம் என்றால் முள்புதர் எல்லாம் இருந்தது. மதன் குமார் இறந்தது நேரடியாக தெரியாது என்றாலும் யூகத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட புகாருக்கு சந்தேகத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**ARNI, TIRUVANNAMALAI DISTRICT.**

**S.C.No.157/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.10** |
| **Name** | **:** | **Dr.R.BalaGanesan.** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.12.2021.**

முதல் விசாரணை -

நான் தற்போது ஆரணி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 6.10.2015 அன்று களம்பூர் காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் பாலசங்கர் என்பவர் குற்ற எண்.161/2015 சம்பந்தப்பட்ட பிரேதத்தை பிண கூறாய்வு செய்ய விசாரணை அதிகாரியின் வேண்டுகோள் கடிதத்துடன் சக்கரவர்த்தி, 70 வயதுடைய ஆண் பிரேதத்தை கொண்டு வந்தார். வேண்டுகோள் கடிதத்தின்படி நான் 6.10.2015 அன்று 10.40 மணிக்கு பிண கூறாய்வு செய்ய ஆரம்பித்தேன். பிரேதத்திற்கு பிண விரைப்பு இருந்தது. பிரேதத்தின் அங்க அடையாளங்கள் இடது மார்பில் ஒரு கருப்பு மச்சம், நடு மார்பில் ஒரு கருப்பு மச்சம் இருந்தது. வெளிப்புற காயங்கள். 1) வெட்டுக்காயம் இடது பின்மண்டையில் 5x1x1 செ.மீ அளவில் காணப்பட்டது. பின் மண்டை எலும்பு உடைந்ததாக காணப்பட்டது. 2) வெட்டுக்காயம் இடது நெற்றியில் 3x 1 x0.5 செ.மீ அளவில் காணப்பட்டது. 3) சீராய்ப்பு காயம் இடது கண் புருவத்தில் 1x 1 செ.மீ அளவில் காணப்பட்டது. மார்பு மற்றும் வயிற்றை ஆய்வு செய்து பார்த்தபோது

மார்பு எலும்பு உடையவில்லை. இதயம் நான்கு அறையும் காலியாக இருந்தது. நுரையீரல் வீக்கமாக இருந்தது. வலது நுரையீரல் 500 கிராமும், இடது நுரையீரல் 400 கிராமும் இருந்தது. வயிறு காலியாக இருந்தது. சிறுங்குடல் காற்று நிரம்பி உப்பியிருந்தது. பெருங்குடலில் சிறியதாக மலம் காணப்பட்டது. கல்லீரல் வீக்கமாக இருந்தது. எடை 1500 கிராம் இருந்தது. மண்ணீரல் வீக்கமாக இருந்தது எடை 180 கிராம் இருந்தது. மண்ணீரலை திறந்து பார்த்தபோது வெளறி காணப்பட்டது. ஆண் குறி சாதாரணமாக இருந்தது. இரண்டு சிறுநீரகமும் எடை 100 கிராம் இருந்தது. இரண்டு சிறுநீரகத்தையும் வெட்டி பார்க்கும்போது உள்ளே வெள்ளையாக இருந்தது. குரல்வளை எலும்பு சாதாரணமாக இருந்தது. மூளையின் எடை 1100 கிராம் இருந்தது. இடது பக்க பின் மூளையில் ரத்த கட்டி காணப்பட்டது. முகம் சாதாரணமாக இருந்தது. கண் இரப்பை மூடியிருந்தது. மூக்கு துவாரங்களில் நீர் வடிந்திருந்தது. நாக்கு வாயின் உள்ளே இருந்தது. இரண்டு காதுகளும் சாதாரணமாக இருந்தது. பிண கூறாய்வு 10.40 மணிக்கு துவங்கி 12.30 மணி அளவில் முடிக்கப்பட்டது. இறப்பிற்கான காரணம் இறந்த நபர் பின்மண்டை எலும்பு உடைந்ததாலும், மூளையில் ரத்த கட்டி ஏற்பட்டதாலும், அதிர்ச்சியாலும் இறந்திருக்கக்கூடும் என்று கருத்து தெரிவித்துள்ளேன். இறந்த நபர் பிண கூறாய்வுக்கு 24 மணி நேரம் முதல் 26 மணி நேரத்திற்குள் இறந்திருக்கலாம். பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.2.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இறந்த நபர் நிலை தடுமாறி கடினமான மேற்பரப்பு உள்ள இடத்தில் பின்பக்கமாக பின்பக்க மண்டை மோதி விழும்போது நான் சொன்ன முதல் வெளிப்புற காயம் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் வாய்ப்புண்டு. வெளிப்புற காயங்கள் 2 மற்றும் 3 கூரிய நகங்கள் கொண்ட ஒருவர் அவராகவே ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்புள்ளதா என்றால் இரண்டாவது காயம் வெட்டுக்காயம் ஏற்படவாய்ப்பு இல்லை. மூன்றாவது காயம் நகங்களால் ஏற்படும்பட்சத்தில் நகத்தின் அடையாளம் காணப்படும். இரண்டாவது காயம் நடந்து செல்லும்போது ஒரு நபர் தடுமாறி கூர்மையான தகடு போன்ற இடத்தில் விழுவதால் ஏற்படவாய்ப்புண்டா என்றால் ஏற்படவாய்ப்புண்டு. மூன்றாவது காயம் சொரசொரப்பான

**பரப்பின் மீது ஒரு நபர் விழும்போது ஏற்படவாய்ப்புண்டா என்றால் வாய்ப்புண்டு.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Additional Sessions Judge,
Arani.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**ARNI, TIRUVANNAMALAI DISTRICT.**

**S.C.No.157/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.11** |
| **Name** | **:** | **Tr. Gandhi** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.12.2021.**

**முதல் விசாரணை -**

நான் களம்பூர். நான் டீக்கடை வைத்துள்ளேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரியை தெரியாது. இறந்து போன சக்கரவர்த்தியை தெரியும். நான் போய் பார்க்கும்போது தெருவில் இறந்து கிடந்தார். போலிசார் நான் போகும்போது இல்லை. அதன்பிறகு வந்தார்களா இல்லையா என்பது எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான் அது அ.சா.ஆ.3. என்னுடன் வேறு யாரும் கையொப்பம் போடவில்லை. கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான் அது அ.சா.ஆ.4.

(சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்ததால் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டு, அனுமதி வழங்கப்பட்டது).

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை.**

5.10.2015ஆம் தேதி பகல் 14.00 மணிக்கு நான் லட்சமணன் உடன் இருந்தபோது சம்பவ இடத்திற்கு வந்து ஆரணி நகர காவல் வட்ட ஆய்வாளர் விசாரணை செய்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தபோதும், சம்பவ இடத்தில் ரத்தம் தேய்ந்த சிமெண்ட் காரை தூள் மற்றும் ரத்தம் தேயாத சிமெண்ட் காரை தூள் ஆகியவற்றை எங்கள் முன்பு கைப்பற்றும்போதும், பிரேத விசாரணை செய்தபோதும் உடன் இருந்து சாட்சி கையொப்பம் போட்டு விட்டு, தற்போது எதிரி எங்கள் ஊரை சேர்ந்தவர் என்பதால் அவரை காப்பாற்றவேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> - இல்லை -

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Additional Sessions Judge,
Arani.

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,</u>**
**<u>ARNI, TIRUVANNAMALAI DISTRICT.</u>**

**<u>S.C.No.157/2018</u>**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.12** |
| **Name** | **:** | **Tr.Lakshmanan.** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.12.2021.**

**<u>முதல் விசாரணை</u> -**

**நான் களம்பூர். நான் வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். இறந்து போன சக்கரவர்த்தியை தெரியும். அவர் இறந்து கிடந்த இடத்தை சென்று பார்த்தேன். தேதி வருடம் ஞாபகம் இல்லை. போலிசார் வந்தார்கள். நான் வீட்டில் இருந்தேன் என்னுடைய அம்மா வந்து சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். நான் போகும்போது போலிசார் அங்கு இல்லை. அதன்பின்னரே போலிசார் வந்தார்கள். போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார்கள். படம் வரைந்தது சம்பந்தமாக எழுதினார்கள். நான் கையொப்பம் போட்டேன். நான் கையொப்பம் போடும்போது காந்தி இல்லை. பார்வை மகசர் அ.சா.ஆ.5. கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். மேற்படி கையொப்பம் எதற்காக போடப்பட்டது என்றால் சாட்சிக்காக போடப்பட்டது. எந்த சாட்சிக்காக போடப்பட்டது என்றால் காரை மண் எடுத்ததற்காக போடப்பட்டது. என்ன காரை எடுக்கப்பட்டது என்றால் ரத்த காரை மற்றும் காரை எடுக்கப்பட்டதற்காக போட்டேன். கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.6. மேற்படி காரைகள் பார்த்தால் அடையாளம் தெரியுமா என்றால் தெரியும். நீதிமன்றத்தில் காட்டப்படும் காரைகள் தான் அவை. ரத்த கறை**

படிந்த காரை சான்று பொருள் 1. சாதாரண காரை சான்று பொருள் 2. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து போலிசார் என்னை விசாரணை செய்தனர் என்றால் சம்பவம் முன்பே நடந்து விட்டது. நான் எங்க அம்மா சொல்லி போய் பார்த்தேன். நான் போன பத்து நிமிடத்தில் போலிசார் வந்தார்கள். நான் போகும்போது பிரேதம் அங்கு இருந்தது. பிரேதத்தின் அருகில் மட்டைகோல் இருந்தது. நீதிமன்றத்தில் உள்ள மட்டைகோல் தான் சம்பவ இடத்தில் இருந்தது. போலிசார் அதை தான் எடுத்தார்கள். போலிசார் மட்டைகோலையும், பிரேதத்தையும் எடுத்துக்கொண்டு போனார்கள். மதியம் 12.00 மணி இருக்கும். நான் அ.சா.1 உடன் புகார் கொடுக்க சென்றேன் என்றால் போகவில்லை. நான் தனியாக சென்றேன். அப்போது போலிசார் என்னிடம் 2,3 கையொப்பங்கள் பெற்றார்கள் என்றால் காவல்நிலையத்தில் வாங்கியதாக ஞாபகம் இல்லை. சம்பவ இடத்தில் தான் கையொப்பம் போட்டேன். நான் கையொப்பம் போட்டது எல்லாம் புகார் கொடுப்பதற்கு முன்பு தான் என்றால் சரி தான். போலிசார் சம்பவ இடத்தில் என்னை விசாரிக்கவில்லை என்றாலும், சம்பவ இடத்தில் கையொப்பம் போடவில்லை என்றாலும், காவல்நிலையத்தில் வைத்து போட்ட கையொப்பங்கள் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Additional Sessions Judge,
Arani.

**<u>S.C.No.157/2018</u>**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.13** |
| **Name** | **:** | **Tr.Sasikumar.** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.12.2021.**

<u>முதல் விசாரணை</u> -

நான் தேவிகாபுரத்தில் வசிக்கிறேன். நான் தற்போது களம்பூர் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். கஸ்தம்பாடி கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது. தேதி ஞாபகம் இல்லை, 10ஆம் மாதம் சுமார் ஐந்து வருடம் முன்பு, முக்குரும்பை கூட்ரோட்டிடம் என் பணி சம்பந்தமாக காலை நேரம், நேரம் ஞாபகம் இல்லை சென்றபோது, பழனி என்பவரை போலிசார் விசாரித்துக்கொண்டு இருந்தார்கள். ஆஜர் எதிரி தான் மேற்படி பழனி. விசாரணையின்போது மேற்படி பழனி குடும்ப தகராறு சம்பந்தமாக ரேஷன் கார்டு கேட்கும்போது மட்டைகோலால் அவரது அப்பா சக்கரவர்த்தியை அடித்ததாக சொன்னார். எதிரி சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை போலிசார் எழுதிக்கொண்டார்கள். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் என்னுடன் வந்த கிராம உதவியாளர் முருகனும் கையொப்பமிட்டோம். பிறகு எதிரியை கைது செய்து இந்திரா நகரில் உள்ள ஒரு வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு விசாரணை நடத்தினார்கள். எதை வைத்து அடித்தார் என்பதற்கு எதிரி கோல் கொடுத்தார். அவர் கொடுத்த கோல் 6 அடி இருக்கும். நீதிமன்றத்தில் உள்ள கோல் தான் அது. ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.7. எதிரி ஆஜர்

செய்த கோலை கைப்பற்றுதல் மகசரில் போலிசார் கைப்பற்றினார்கள். கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.8. மட்டை கோல் சான்று பொருள் 3. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்த அன்று 10, 10.30 மணி அளவில் முக்குரும்பை கூட்ரோட்டிடம் சென்றேன். போலிசார் என்னை தொலைபேசியில் அழைத்தார்களா என்றால் இல்லை. போலிசார் என்னை காவல்நிலையம் வர சொன்னார்களா என்றால் வர சொல்லவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தை முக்குரும்பை கூட்ரோட்டில் வைத்து தான் எழுதினார்கள். சாட்சி தற்போது எழுதிய பிறகு காவல்நிலையம் சென்று டைப் செய்து கொண்டு வந்தார்கள் என்று சாட்சியம் அளிக்கிறார். பிறகு டைப் செய்ததில் தான் நானும் கிராம உதவியாளரும் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் போட்டோம் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பமும் காவல்நிலையத்தில் வைத்து போடப்பட்டது என்றால் சரி தான். ஒப்புதல் வாக்குமூலம் வாங்கப்பட்ட அரை மணி முதல் ஒரு மணி நேரத்திற்குள் இந்திரா நகர் சென்றுவிட்டோம். இந்திரா நகர் போய்விட்டு காவல்நிலையம் சென்றேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் சொல்வது போல் எதிரியை முக்குரும்பை கூட்ரோட்டிடம் விசாரணை செய்யவில்லையென்றாலும், எதிரி என் முன்னிலையில் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், போலிசார் அழைத்ததின்பேரில் நான் காவல்நிலையம் தான் சென்றேன் என்றாலும், காவல்நிலையத்தில் தயார் செய்து வைத்திருந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தேன் என்றாலும், எதிரி எந்த ஒரு பொருளையும் ஒப்படைக்கவில்லையென்றாலும், காவல்நிலையத்தில் வைத்து எடுக்கப்பட்ட பொருளுக்கு நான் கையொப்பம் போட்டேன் என்றாலும் சரியல்ல. சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட மட்டைகோலுக்கு என்னை வைத்து

**கைப்பற்றுதல் மகசர் காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Additional Sessions Judge,
Arani.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**ARNI, TIRUVANNAMALAI DISTRICT.**
**S.C.No.157/2018**

**Deposition of Witness for : P.W.14**

**Name : Tr.Murugan.**

**Father's Name :**

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.12.2021.**

**முதல் விசாரணை -**

நான் கஸ்தம்பாடி கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.13 கிராம நிர்வாக அதிகாரியாக அப்போது இருந்தார். 6.10.2015அன்று இரவு 8 மணிக்கு முக்குரும்பை கூட்ரோட்டிடம் பழனி என்பவரிடம் வாக்குமூலம் பெற்றார்கள். ஆஜர் எதிரி தான் பழனி. அவருடைய அப்பாவிற்கும் அவருக்கும் ரேஷன் கார்டு சம்பந்தமாக தகராறு என்று சொன்னார். தகராறில் ஆஜர் எதிரி கொம்பால் அவருடைய அப்பா சக்கரவர்த்தியை அடித்ததாக சொன்னார். குடும்ப அட்டையை பிரித்துக்கொடுப்பது சம்பந்தமாக தகராறு. எதிரி சொன்னதை போலிசார் எழுதிக்கொண்டார்கள். அதில் நானும் மணியக்காரரும் கையொப்பம் போட்டோம். ஒப்புதல் வாக்குமூலத்திற்கு பிறகு அடிக்க பயன்படுத்திய பொருளை பறிமுதல் செய்தார்கள். இந்திரா நகரில் எதிரி வீட்டில் ஒரு புதரில் பறிமுதல் செய்தார்கள். அதனுடன் ரேஷன் கார்டும் பறிமுதல் செய்யப்பட்டது. ரேஷன் கார்டு சான்று பொருள் 4. பறிமுதல் செய்தது சம்பந்தமாக என்னிடம் கையொப்பம் பெறப்பட்டது. மணியக்காரரும் கையொப்பம் போட்டார். ரேஷன் கார்டிற்கான கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.9. நீதிமன்றத்தில் உள்ளது தான் பறிமுதல் செய்யப்பட்ட கொம்பு. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**வழக்கு சம்பந்தமாக நான் கிராம நிர்வாக அலுவலர் உடன் காவல்நிலையம் சென்றேன். டைப் செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் போட்டேன் என்றால் சரி தான். நான் சொல்வது போல் எதிரி எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், எந்தவொரு பொருளும் கைப்பற்றப்படவில்லையென்றாலும் சரியல்ல. நான் சொல்வதுபோல் இரவு 8 மணிக்கு முக்குரும்பை கூட்ரோட்டில் எந்த ஒரு நபரையும் போலிசார் கைது செய்யவில்லை என்றாலும், போலிசார் தயார் செய்த ஆவணத்தில் கையொப்பம் செய்துவிட்டு போலிசாருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்திருந்த மட்டைகோல் மற்றும் ரேஷன் கார்டிற்கு நான் கையொப்பம் போட்டேன் என்றால் சரியல்ல.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Additional Sessions Judge,
Arani.

**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,</u>**
**<u>ARNI, TIRUVANNAMALAI DISTRICT.</u>**

**<u>S.C.No.157/2018</u>**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.15** |
| **Name** | **:** | **Tmt.Sulochana** |
| **Father's Name** | **:** | |

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.12.2021.**

**முதல் விசாரணை -**

**நான் கஸ்தம்பாடியில் குடியிருக்கிறேன். மாடு வைத்துள்ளேன். இறந்துபோன சக்கரவர்த்தி எனக்கு தெரியும். ஆஜர் எதிரி தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் உடல்நிலை சரியில்லை என்பதால் மருந்து வாங்க அடுக்கம்பாறை சென்றுவிட்டேன். வரும்போது தான் பேசிக்கொண்டார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.**

**(சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்ததால் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டு, அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை.**

**5.10.2015 அன்று நான் வீட்டில் இருந்தபோது இறந்துபோன சக்கரவர்த்தியின் மூன்றாவது மனைவி தரணியும், தரணியின் மகன் பழனியும் காலை 11.30 மணிக்கு சக்கரவர்த்தியின் வீட்டிற்கு வந்ததாகவும், அவர் சைக்கிளில் இருந்த ரேஷன் கார்டை எதிரி பழனி எடுத்ததாகவும், அதனால் வாய் தகராறு ஏற்பட்டு எதிரி அவருடைய அப்பாவின் தலை மீது மட்டைகோலால் மாறி மாறி அடித்து கீழே தள்ளியதாகவும், அதில் சக்கரவர்த்தி கஸ்தூரி வீட்டு எதிரே உள்ள சிமெண்ட் ரோடில் கீழே விழுந்து இறந்துபோனதாகவும் சம்பவத்தை பார்த்து சக்கரவர்த்தியின் தாயார் பூங்காவனம், ஏழுமலை சத்தம் போட்டதாகவும், எதிரி பழனி மட்டைகோலுடன் ஓடி சென்றதை பார்த்ததாகவும், அதில் எனக்கு பயம் வந்து உள்ளே சென்றதாகவும், பிறகு போலிசார்**

என்னை விசாரித்தபோது நடந்ததை சொன்னதாகவும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு எதிரி எங்கள் தெருவை சேர்ந்தவர் என்பதால் அவரை காப்பாற்றவேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை -

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Additional Sessions Judge,
Arani.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**ARNI, TIRUVANNAMALAI DISTRICT.**

**S.C.No.157/2018**

**Deposition of Witness for : P.W.16**

**Name : Tr.Prakash**

**Father's Name :**

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.12.2021.**

முதல் விசாரணை -

நான் வடுகசாத்து கிராமத்தில் வசிக்கிறேன். லாரி டிரைவராக பணிபுரிகிறேன். இறந்துபோன சக்கரவர்த்தி தெரியும். ஆஜர் எதிரி தெரியும். சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்ததால் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டு, அனுமதி வழங்கப்பட்டது).

அரசு தரப்பு குறுக்கு விசாரணை.

5.10.2015ஆம் தேதி சின்னக்குழந்தையுடன் எனது சித்தி தரணியுடன் சக்கரவர்த்தி வீட்டிற்கு சென்றபோது எனது சித்தி தரணி, சித்தி மகன் பழனி, ஆகியோர் காலை 11.30 மணிக்கு குடும்ப சண்டை ஏற்பட்டதாகவும், அப்போது பழனி சக்கரவர்த்தியை தகாத வார்த்தையால் திட்டி சர்க்கரை அட்டையை எடுத்துக்கொண்டு மட்டைகோலால் சக்கரவர்த்தியின் இடது பின்பக்கம், இடது நெற்றி, இடது கண்புருவம் ஆகிய இடங்களில் மாறி மாறி அடித்ததாகவும், இதோடு சாவுடா என்று சொல்லி பிடித்து கீழே தள்ளியதாகவும் அதில் சக்கரவர்த்தி கஸ்தூரி என்பவரின் வீட்டின் எதிரில் உள்ள சிமெண்ட் ரோட்டில் கீழே விழுந்ததாகவும், தலையில் ஏற்பட்ட காயங்களினால் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும் உடனே நானும் சின்னக்குழந்தை, பூங்காவனமும் கூச்சல் போட்டதாகவும், பழனி அங்கிருந்து தனது கையில் வைத்திருந்த மட்டை கோலுடன் ஓடிவிட்டதாகவும் பிறகு சின்னக்குழந்தை புகார் கொடுத்ததன்

அடிப்படையில் போலிசார் என்னை விசாரித்தபோது மேற்கண்டவற்றை சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரி என்னுடைய சித்தி மகன் என்பதால் என் சித்தி மகனை காப்பாற்றவேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை -

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Additional Sessions Judge,
Arani.